மாவட்ட உரிமை இயல் நீதிமன்றம், திருச்செங்கோடு,

மாவட்ட உரிமை இயல் நீதிமன்றம், சங்ககிரி.

இவை தவிர, சேலத்தில் இரண்டு கோர்ட்டுகள் இருக்கின்றன இவைகளை மாற்றியமைக்க முடியுமா என்று பரிசீலித்து, உறுப்பினருடைய யோசனைகளையும் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. இராசேந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள வட்டத் தலைமையகங்களிலே, மாவட்ட உரிமை இயல் நீதிமன்றங்கள் ஏற்படுத்த நிதிவசதி இல்லை என்றாலும், ஒரு சில வட்டத் தலைமையகங்களில் இரண்டு மாவட்ட உரிமை இயல் நீதிமன்றங்கள் இருக்கின்றன. கூடுதல், முதன்மை என்று இரண்டு இருக்கிறது. உதாரணமாக திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில், ஆரணி, திருவண்ணாமலை போன்ற இடங்களில் இரண்டு மாவட்ட உரிமை இயல் நீதிமன்றங்கள் இருக்கின்றன. அவைகளை முறையே, வந்தவாசி, செங்கம் போன்ற இடங்களுக்கு மாற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : அதைத்தான் நான் இப்போது திரு. அர்ஜுனன் அவர்களுக்குச் சொன்னேன். ஒரே மாவட்டத்தில் 2 நீதிமன்றங்கள் இருந்தால் அவைகளைப் பிரித்து ஒரு நீதிமன்றத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல ஆக்கலாமா என்று பரிசீலிக்க வேண்டும். உயர்நீதிமன்றத்தின் கருத்தைக் கேட்டு நடவடிக்கை எடுக்கலாம்.

பினாமி நிலங்கள்.

* **1617** திருமதி பாப்பா உமாநாத் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவரம்பூர் ஒன்றியம் சூரியூர் கிராமப் பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களைத் தனி நபர்கள் பினாமியாக கையகப்படுத்தியிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அந்நிலங்களை கைப்பற்றி அப்பகுதியிலே உள்ள நிலமற்ற ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுத்திட அரசுக்குத் திட்டமுண்டா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1990 ஏப்ரல் 20]

(அ) மற்றும் (ஆ) : திருச்சி மாவட்டத்திலுள்ள சூரியூர் கிராமத்தில் 468.23 ஏக்கர் நிலம் உபரியாக அறிவிக்கப் பட்டது. அவற்றில் 122.41 ஏக்கர் நிலம் பாரதிதாசன் பல்கலைக் கழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மீதி நிலத்தை ஒப்படை செய்வது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

9-30 மணி

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் கூறியது போன்று அல்லாமல் சூரியூர் பகுதியிலே ஏறத்தாழ 800 ஏக்கர் நிலங்களை வி.ஜி.பி. கம்பெனியாரும், ஜவுளி முதலாளியாக இருக்கக்கூடிய தைலா முதலாளியும் பினாமியாகக் கைப்பற்றி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வழக்கு கோர்ட்டில் இருக்கிறது என்பதை நான் அறிவேன். ஆனால் அதற்குள் போகாமல், ஸ்டே ஆர்டர் வாங்கி பல ஆண்டுகள் ஆகியும் கூட அந்த ஸ்டே ஆர்டரை உடைத்து அந்தச் சுற்று வட்டாரத்தில் இருக்கிற கிராமங்களில் உள்ள நிலம் இல்லாதவர்களுக்கு வழங்க அரசு என்ன செய்திருக்கிறது? அரசினுடைய வழக்கறிஞர் அந்த ஸ்டே ஆர்டரை உடைக்க என்ன செய்தார்? சென்ற முறையும் நம்முடைய அரசு அமைந்தபோதே நான் கேட்டேன். வி.ஜி.பி. அவர்களுடைய நிலத்தை எடுக்க இந்த அரசு முயற்சிக்குமா என்று கேட்டபோது அன்றைக்கு நம்முடைய திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் உறுதிமொழி தந்தார்கள் முதலமைச்சரின் சார்பாக. எனவே இன்றைக்கு நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி என்ன கூறுகிறார் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் 800 ஏக்கர் நிலத்தைக் கைப்பற்றியிருப் பதாகச் சொல்கிறார்கள். எனக்குக் கிடைத்த தகவலை அவருக்கும், இந்த அவைக்கும் நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். திருச்சி மாவட்டம் மற்றும் வட்டம் சூரியூர் கிராமத்தில் திரு. கே. வாசுதேவன் என்பவரின் கைப்பறை யிலிருந்த 468.23 ஏக்கர் பரப்புடைய நிலம் உபரியாக அறிவிக்கப்பட்டது. அவற்றில் 115.53 ஏக்கர் நிலம் மற்றும் 6.8 ஏக்கர் நிலம் ஆக மொத்தம் 122.41 ஏக்கர் நிலங்கள் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் உபயோகத்திற்காக தமிழ் நாடு நிலச்சீர்திருத்த விதிகள் 1985 விதி 13-ன்படி முறையே அரசாணை நிலை எண் 614, வருவாய், நாள் 18—4—1985 மற்றும் அரசாணை நிலை எண் 364, வருவாய், நாள் 5—3—1987 நில ஒதுக்கீடு செய்யப்பட்டது. இது நீங்க லாக 212.93 மற்றும் 132.89 ஏக்கர் நிலங்களைத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யுமாறு நிலச் சீர்திருத்த ஆணையாளர் செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். அதனுடைய

விவரங்கல் எல்லாம் என்னிடம் இருக்கின்றன. பாரதிதாசன் பல் கலைக் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 112.41 ஏக்கர் நிலம் போக எஞ்சிய உபரியாக உள்ள நிலங்களில் அத்துமீறி பொது மக்களாலும் மற்றும் வசதி படைத்தவர்களாலும் ஆக்கிரமங்கள் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு அதனை வீட்டு வசதி வாரி யத்திற்கு ஒதுக்கீடு செய்யலாம் என வீட்டுவசதித் துறைக்கு வருவாய்த்துறை ஆணையாளர் கடிதம் அனுப்பினார். ஆனால் தமிழ்நாடு வீட்டுவசதி மேலாண்மை இயக்குநர் மேற்படி நிலங்கள் சிறு, சிறு பகுதியாக உள்ளதாகவும், இந்நிலங்களை ஒருங்கிணைத் திட வேண்டுமாயின் வாரியம் சுமார் 789 ஏக்கர் பட்டா நிலங் களை ஆர்ஜிதம் செய்திட வேண்டும்; பட்டா நிலங்களில் விலை அதிகம்; மேலும் திருச்சி இரயில்வே நிலையத்திற்கு 26 கிலோ மீட்டர் தூரத்தில் அது உள்ளதாலும் எதிர் வரும் 20 முதல் 25 ஆண்டுகளுக்கு அதை உபயோகப்படுத்த இயலாது என்றும் தெரிவித்துள்ளதால் அந்த நிலங்களை—திருமதி பாப்பா உமாநாத் அவர்களின் கவனத்திற்கு வைக்கிறேன்.—நிலமற்ற ஏழைகளுக்கு 1965 ஆம் ஆண்டைய தமிழ் நாடு நிலச் சீர்திருத்த (உதவி) விதிகளின்படி ஒப்படை செய்யலாமா என்பதைப் பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டிருக்கக் கூடிய நிலங்கள் பற்றிய பிரச்சினை வேறு. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேறு விவரங்களைக் கூறிக் கொண்டு இருக்கிறார். இன்றைக்கும் வழக்கு இருக்கிறது. போன சட்டமன்றக் கூட்டத் தொடக்கத்தில் நான் குறிப்பிட்டிருக்கிறேன். சூரியூரிலிருந்து நாவல்பட்டிக்கு அந்தப் பக்கம் இருக்கக்கூடிய பகுதி பூராவும் அவர்கள் கையிலேதான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வழக்கின்படி ஆர்.டி.ஓ. அவர்கள் அங்கே நுழையக்கூடாது என்று கூட உத்தரவு வாங்கி இருந்தார்கள். அந்த வழக்கு நீண்ட காலமாக நடந்து கொண்டிருக்கின்றது. விரைவில் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்றுதான் நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஆகவே நீங்கள் சொல்லக் கூடிய தகவல் வேறு. அதாவது யூனிவர்சிட்டிக்குக் கொடுக்கப் பட்டிருக்கக் கூடிய நிலப் பகுதி வேறு. இதில் இருக்கக்கூடிய நிலம் ஒருவேளை 800-க்கு 100 குறைவாக இருக்கலாம். அந்தப் பெரும் நிலத்தை அவர்கள் கைப்பற்றி வைத்துக் கொண்டிருக் கிறார்கள். பினாமியாக ஏழை எளிய மக்களிடம் இருந்து சதுர அடி 30 காசு என்று வாங்கி வைத்துக் கொண்டிருக்கிறார் கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருச்சிக்கு வந்த போது கூட நான் இதைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னேன்.

9-35 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வரலாறுகளை ஒதுக்கி, வினாவுக்கு வரவும்.

1990 ஏப்ரல் 20]

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே கூறியிருக்கும் விஷயங்களுக்கு மாண்புமிகு அமைச்சர் விவரமாக இங்கே பதில் கூறினால் உதவியாக இருக்கும்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த முறை நான் திருச்சிக்கு வரும் நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் பாப்பா உமாநாத் அவர்களை அழைத்து, அவர்கள் இங்கே குறிப்பிட்டார்களே, அந்தப் பகுதிக்கு விஜயம் செய்து, அவர் விருப்பப்படி அல்லது முடிந்தால் இயன்றபடி நடவடிக்கை அது குறித்து எடுக்கப்படும் என்ற உறுதியை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரியூர் கிராமம் மட்டுமல்லாமல் திருவரம்பூரை ஒட்டியுள்ள பகுதிகளிலுள்ள நிலங்கள், ஏற்கெனவே ஆதி திராவிட மக்களுக்கும், இன்னும் அங்கே இருக்கின்ற மற்றவர்களுக்கும் அளிக்கப்பட்ட அந்த நிலங்களை, அவர்கள் விற்றதற்குப் பின்னால், அவர்களுக்கு மீண்டும் அந்த நிலத்தை வாங்கித் தர வேண்டுமென்று அந்தப் பகுதி ஆதி திராவிட மக்களும், அந்தப் பகுதி இதர மக்களும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆண்டாண்டுக் காலமாக எங்களைப்போன்று அங்கே இருக்கிற மக்கள் பிரதிநிதிகளிடம் இது போன்ற குறைகளை அவர்கள் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அரசிடம், மீண்டும் ஆர்ஜிதம் செய்து அவர்களுக்கேத் தர வேண்டுமென்று கேட்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சரிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புவது ஒருவரிடம் நிலத்தைக் கொடுத்ததற்குப் பின்னால், 12 ஆண்டுகளுக்குப் பின்னால், மீண்டும் அதைக் கையகப்படுத்தும் போது அவர்களுக்கே அந்த நிலம் தரப்படுமா அல்லது அவர்களை ஒதுக்கிவிட்டு மற்றவர்களுக்குத் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விஷயத்தில் மாண்புமிகு உறுப்பினர் திருமதி பாப்பா உமாநாத் அவர்களுக்கும், திரு. மலர்மன்னன் அவர்களுக்கும் இடையே இரண்டுவிதமான கருத்துக்கள் இருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். ஒரு பனிப்போர் நடக்கிறது. A cold war is going on. அந்த யுத்தத்திலிருந்து அவர்களை விடுவிக்க வேண்டிய பொறுப்பு என்னிடத்தில் இருக்கிறது என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு).

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சூரியூர் கிராமமானது பழைய சேர்மன் திரு. வாசுதேவனுடைய சொந்தக் கிராமம்.

அந்தக் காலத்தில் வினோபா பாவே பூமிதான இயக்கத்தின் போது நாடு பூராவும் சுற்றும்போது எங்களைப் போன்றவர்கள் எல்லாம் அவர்களுக்கு நிலம் கொடுத்தோம். அந்தக் காலத்தில் இது போன்ற நிலங்களைக் கையகப்படுத்துவதில்லை. பிரி ஆகக் கொடுத்தோம். பூமி இல்லாமல் இருக்கின்ற ஏழை யெளியவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் நிலங்களைக் கொடுப்பவர்கள் கூட கூடுமானவரை நல்ல நிலங்களைத் தங்களிடம் வைத்துக் கொண்டு மற்றவைகளைதான் பூமிதான இயக்கத்துக்குக் கொடுத்தார்கள். அப்போது இதில் சீலிங் ஒன்றும் இல்லை. அப்போது இந்த சூரியூர் கிராமத்திலும் நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்கள் இதற்காக கொடுக்கப்பட்டுள்ளன. அந்த நிலங்களையும் இது கட்டுப்படுத்துமா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாசுதேவன் அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர் திரு. தீட்சிதர் அவர்களுக்கும் உள்ள தொடர்பு பற்றி எனக்குத் தெரியாது. (சிரிப்பு)

திரு. டி. பொன்முடி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல்வேறு இடங்களில் இதுபோன்ற நில ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதியிலுள்ள நாராயணகுப்பம் என்கிற கிராமத்தில். . . . . (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு அமைச்சரிடம் இருந்து விடை வராது.

வீட்டு மனை வழங்குதல்.

* *7160*—திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, அண்ணா மடுவு என்ற இடத்தில் கால்நடை மருத்துவமனைக்கு அருகில் உள்ள ரெவின்யூ புறம்போக்கு இடத்தினை வீடு இல்லாத ஏழைகளுக்கு வீட்டு மனையாகப் போட்டுக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

பெரியார் மாவட்டம், பவானி வட்டம், பச்சாம் பாளையம் கிராமம், புல எண் *438* இல் ஒப்படை கோரப் படும் அண்ணாமடுவு என்ற இடம் '' மந்தைப் புறம்போக்கு '' நிலம் ஆதலால் அதனை ஒப்படை செய்யத் தடை உள்ளது.